**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | |
|---|---|
| Case No. | : STC No.98/2026 |
| Deposition of witness for Prosecution | : P.W– 5 |
| Name | : பால்ராஜ், வயது 36 |
| Father Name/Husband Name | : சங்கரபாண்டியன் |
| Village | : தீத்தாம்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : அலுவலக உதவியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது தீத்தாம்பட்டியில் வசித்து அலுவலக உதவியாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 05.03.2024 அன்று மாலை 06.15 மணியளவில் கோவில்பட்டி, நேஷனல் பொறியியல் கல்லூரியில் உள்ள மெக்கானிக்கல் டிப்பார்ட்மண்டில் உள்ள அ.சா.1 ன் கேபினில் வைத்து ரவிசந்திரன் மற்றும் என் முன்பு நாலாட்டின்புதூர் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்ததற்கு என்னிடம் கையொப்பம் கேட்டதன்பேரில் நாங்கள் இருவரும் பார்வை மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(அந்த பார்வைமகஜர் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2 நான் M.CA படித்துள்ளேன். நான் 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி கல்லூரியில் வேலை பார்க்கிறேன். மெக்கானிக்கல் துறையில் சுமாராக 28 பேராசிரியர்கள் இருப்பார்கள். Staff cabin மொத்தம் 20 அங்கு அங்கு உண்டு, Lab லும், பேராசிரியர் அறையிலும் இருக்கும்.

பேராசிரியர்களுக்கென்று தனியாக அறைகள் உண்டு என்றால் சரிதான். Staff cabin யை Staff கள்தான் பயன்படுத்துவார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பர் கையால் எழுதப்பட்டிருந்ததது. நான் கையொப்பம் செய்த பேப்பர் எத்தனை பக்கம் இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அன்றைய தினம் ஒரு கையெழுத்து செய்தேன். நான் நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.